தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 13 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை | 11–5–57 | சனிக்கிழமை | இதழ் 34

அத்தையும் மீசையும்!

புதிய சட்டசபையின் துவக்கத்திலே சுவை சொட்டும் பல சம்பவங்கள் நடந்துமுடிந்திருக்கின்றன. வார்த்தைகளை அடுக்கிப் பார்த்து வான்கோழி நடனமாடினர் சிலர். ஏட்டுப் புலமையை அவிழ்த்துவிட்டுக் குழந்தைபோல் பேசி, இருக்கின்ற இடம் தெரியாமல் மூழ்கிப் போயினர் வேறு சிலர். இன்னும் சிலர், 'அடியேனுக்கு வாக்களியுங்கள்' என்று அன்னைமொழியில் கேட்டு, அரியாசனம் ஏறியவுடன் ஆங்கிலத்தில் பதவிப் பிரமாணம் எடுத்து, 'என் மானம் இவ்வளவுதான்! என் பாட்டன் மானம் திருத்தனிப் போர்க்களத்திலிருந்து வந்துகொண்டிருக்கிறது' என்று ...

நடையோடு வந்தார். நெஞ்சு என்று ஒன்று இருப்பதால் நேர்கொண்ட பார்வையை நாம் அவரிடம் எதிர்பார்க்கவில்லை - அது முறையுமல்ல!

கோயில் பாளையத்து வெற்றி வீரர்-வாயில் வந்ததுதான் முடிவு என்று பேசும் 'மக்கள் ஜனநாயக வாதி' சுப்ரமணியம் மெருகு குலையாமல் மேனி அசையாமல் ஒருமுறைக்குப் பலமுறை தன்னையே ஏற இறங்கப் பார்த்துக்கொண்டு அவை புகுந்தார். ஆடம்பரமும் அலங்காரமும் அவருக்கு வேண் ...

தன்னிலே மறந்து இருந்தவர்களும் அண்ணா அவர்களின் அரிய சொற்பொழிவினைக் கேட்டு அயர்ந்துபோனார்கள். 'அண்ணாத்துரை இவர்தானா?' என்று ஆயாசத்துடனேயே மெய்மறந்து போனவர்கள் அண்ணாவின் பேச்சை அன்று மாலை தினசரி இதழ்களில்தான் படித்துத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அன்றுதான் கோட்டையிலே தமிழ்மணம் வீசத் தொடங்கியது. அடிமைகொள்ள வழி காட்டிய அகண்ட கடலுக்கு எதிரே அன்றுதான் தென்திசைத் தலைவர் ஆர்ப்பரித்தார். அண்ணா ...

பினர்தான்! இதைக் காங்கிரஸ்காரர்கள் மறந்துவிடக் கூடாது. இதை எடுத்துக் கூறினால் 'அத்தைக்கு மீசை முளைத்தால் மச்சான்' என்று பிரஸ்தாபித்தது போல் 'அடிக்கும் யானை சறுக்கும்' என்பார்கள் அந்த அம்மையார். காங்கிரஸ் வளர்த்த பெண் கல்வியின் லட்சணம் அல்லவா அங்கே களிநடம் புரிகிறது!

வெள்ளிக்கிழமையன்று கவர்னர் துரையவர்களின் பேருரை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. கழக எம். எல். ஏக்கள் கவர்னர் உரையில் தென்பட்ட ஓட்டை உடைசல்களைச் சுட்டிக் காட்டினார்கள். அதில் யாருமே சலிப்பூட்டும்படியான வார்த்தைகளைப் ...

எதிர்க்கட்சித் தலைவர் - எல்லோர்கவனத்தையும் கவர வேண்டியவரல்லவா அந்த வாலிப மந்திரி. மற்றவர்கள் வந்தார்கள் கொற்றவர் காமராசருக்குப் பின்னே வரும் பட்டுக் குடைகளைப் போல் களப்தி கக்கன் வந்தார்! திரைகடலோடித் திரவியம் தேடும் மந்திரி ராமையா வந்தார்.

சபை தொடங்கியது. சபைத் தலைவர் கிருஷ்ணராவைப் பாராட்டிப் பலர் பேசினர். அண்ணா அவர்களும் தலைவரைப் பாராட்டிப் பேசினார்கள். அயர்ந்திருந்த காங்கிரஸ் எம். எல். ஏக்கள் நிமிர்ந்து உட்கார்ந்தனர். குறை காணத் திட்டமிட்டுக் கொண்டிருந்தவர்களும், பார்லிமெண்டரி முறையில் பேசத் தெரியுமா இவர்களுக்கு என்று ...

முதல், தி. மு. கழகத்தைச் சார்ந்த அத்தனை சட்டசபை உறுப்பினர்களும் பார்லிமெண்டரிமுறை தவறாது பேசிப் பழகவேண்டியவர்களல்ல! மக்கள் மன்றத்திலே கூட மாசுகடைச் சொற்களை வீசியறியாதவர்கள். ஆண்டு பழக்கப்பட்ட காங்கிரஸ் உறுப்பினர்களுக்குத்தான் வாய் திறந்து பேசவே ஓய்வு நேரத்தில் மந்திரிகள் பயிற்சி வகுப்பு நடத்த வேண்டியிருக்கிறது என்பதை அவர் உணரவில்லை. உண்மையைச் சொன்னால், இந்தச் சட்டசபையில் பார்லிமெண்டரி முறையைக் கடந்து பேசியது குழந்தையம்மாள் என்ற காங்கிரஸ் உறுப் ...

பயன்படுத்தவில்லை, கச்சிதமாகப் பேசினார்கள். கழக எம். எல். ஏக்கள் பேசும்போது; காமராசர் கழற்றி வைத்திருந்த மூக்குக் கண்ணாடியை மாட்டிக்கொண்டு அடிக்கடி நிமிர்ந்து உட்கார்ந்தது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்! இடையிடையே அண்ணாவும், காமராசரும் எதிர் எதிரே இருந்து சிரித்துப் பேசிக்கொண்டிருந்ததைப் பார்வையாளர் பேரணி, கண்டு ரசித்தது.

திங்கள் காலை! அரசியல் ஆர்வம் கொண்டோர் அனைவரும் சென்னையில் புதுமுறுக்குடன் தென்பட்டார்கள். அன்றுதான் அண்ணா அவர்கள் கவர்னர் பேருரையின்மீது வாதம் செய்தார். சபைத் தலைவர் அண்ணாவுக்கு முப்பது நிமிடங்கள் பேசுவதற்கு அனுமதியளித்திருந்தார். கடிகாரமே கட்டிப் பழக்கமில்லாத அண்ணா அவர்கள் துல்லியமாக இருபத்தொன்பதாவது நிமிடத்தில் உரையை முடித்தார்கள். திராவிடர் தலைவருக்குள்ள இந்த தனித்தன்மையை காங்கிரஸ் எம். எல். ஏக்கள் கூட மனதுக்குள்ளே ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். அந்தக் குறுகிய ...

திக் கொண்டார்கள். பார்
யாளர் காலரி பொங்கி வழி
பிரதிநிதிகளைத் தேர்ந்தெடு
உரிமைபெற்ற ... ண்மை
எசமானர்களாக பொதும
கம்பீரமாக வீற்றிருந்தனர்.
ளைக்கார ... காலத்திலி
'கொள்ளைக்கார' பிரகாசா க
முடிய காங்கிரஸ் கனவான
இவ்வளவு திரளான கூட்ட
சட்ட மன்றத்தில் கண்டி
மாட்டார்கள். அவர்கள் நட
பொதுக் கூட்டங்களி
மக்களைப் பார்க்கும் பா
அவர்களுக்குக் கிடைப்பதி
என்கிறபோது, சட்ட மன்ற
எப்படிக் கிடைக்கப்போகி
முதல்நாள் கூடி கடற்கரை
'முழக்க' மிட்டுப்போ
களுக்கு, மறுநாள் சட்டசபை
மக்கள் திரண்டிருந்த
நிலைக்கூட்டக் கொடுத்திரு
அழுங்காமல் வந்து, அ
வருக்குத் தெரியாமல் எ
போய்க் கொண்டிருந்தவ
தானே! அவர்களுக்கு ம
கூட்டமே 'கலவரக் கூட்டம
ட்டிருந்தாலும் அது ஆச்ச
டக்கூடியதல்ல!

போலீஸ் இலாகா கையி
றது என்ற தெம்பில் மீ
மாகனார் பக்தவத்சலம் நிப

கண்ணியத்தை மறந்த 'கஜானா'க் காவலர்!

காலத்திற்குள் என்ன பேசினார்? அவருடைய சொற்பொழிவை இரண்டாவது முறை படித்துப் பார்த்தால் 'அவர் எதை விட்டு வைத்தார்?' என்று தான் நினைக்கத் தோன்றுகிறது. அண்ணா அவர்களின் இருபத்து ஒன்பது நிமிட நேர வாதத்திற்குத்தான் எதிர்க்கட்சித் தலைவர் சுப்ரமணியம் சரியாக இரண்டு மணி நேரம் பேசியிருக்கிறார். குற்றவாளி நிரபராதியாகிவிட வாதியாக முந்திவிட நினைப்பதைப்போல், நெடுநேரம் பேசினால் அது ஆதாரப்பூர்வமான விளக்கமாகும் என வழக்கறிஞர் சுப்ரமணியம் நினைத்தார் போலும்! "நல்லதைச் சொன்னால் ஏற்றுக் கொள்வோம். எதிர்க்கட்சி என்பதற்காக எல்லாவற்றையும் எதிர்த்துப் பேசினால் நாங்கள் ஒப்புக்கொள்ள மாட்டோம்" என்று சுப்ரமணியம் அவரது வாதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அதே சுப்ரமணியம்தான் அண்ணா கேட்ட வைகளையே புரிந்துகொள்ளாமல் எதிர்க்கட்சித் தலைவராகவே நடந்துகொண்டிருக்கிறார்; அது ஏன் மந்திரி பதவி என்பது தேவலோகத்திலிருந்து கிடைக்கும் அற்புதக் கனி என்ற நினைப்பிலே வாதத்தை முடித்திருக்கிறார். நடுநிலைமை வகிக்கும் யாரும், அண்ணாவின் வாதத்தையும், சுப்ரமணியத்தின் பதிலையும் படித்துப் பார்த்தால், எதை எந்த இடத்தில் பேசவேண்டுமென்ற அரசியல் ஞானம் யாருக்குக் குறைவாக இருக்கிறது என்பது நன்கு புலனாகும். சுப்ரமணியத்தின் பேச்சில் பெருந்தன்மை இல்லை. கண்ணியம் அறவே இல்லை. அங்காடிக் கடையில் இருந்துகொண்டு ஒரு போட்டி வியாபாரி 'போனால் வராது—பொழுது போனால் கிடைக்காது' என்று கூவுவதைப் போல் அமைந்திருக்கிறது சுப்ரமணியத்தின் வாதம். சர்ச்சில் சகாப்தத்தில், எல்லாவற்றையும் எதிர்த்துப் பேசும் சர்க்கார் கட்சித் தலைவருக்கு மதிப்பிருந்தது. அதுதான் அரசியல் என்றும் கொள்ளப்பட்டது. ஆனால் அங்கே நடந்தது தனி மனிதர் ஆட்சி; இங்கே நடப்பது மக்களின் ஜனநாயக ஆட்சி!

கவர்னர் பேருரையின்பேரில் பேசிய பேச்சில் அண்ணா அவர்கள் தி. மு. கழகக் கொள்கைகளை எடுத்துரைத்தார் என்றால், அந்தக் கருத்துக்களை அப்படியே காங்கிரஸ் ஏற்றுக்கொள்ள வேண்டும்; ஏற்றுக்கொண்டுவிடும் என்று எதிர்பார்த்து அல்ல. ஆண்டு பலவாக மக்களிடத்தில் எதை வலியுறுத்திக்கொண்டு வந்தோமோ, எதைக் கூறி வாக்குகளைப் பெற்றோமோ அந்த வாக்குறுதிகளை ஆட்சி மன்றத்திலேயும்பேசி பொதுமக்களிடம் எங்களின் உண்மை உள்ளத்தைக் காட்டுவதற்குத்தான் நாட்டுப் பிரிவினையை அறிஞர் அண்ணா அவர்கள் விளக்கிப் பேசினார்கள்.

உடனே 'உலக மேதாவி' சுப்ரமணியம் "அதற்கெல்லாம் இங்கே இடமில்லை" என்று கூறிவிட்டார். ஏந்தியிருக்கும் பதவிக்கும், எடுத்துக்கொள்ளும் சம்பளத்திற்கும் நன்றி விசுவாசத்துடன் நடந்துகொண்டதற்காக நாம் அவரைப் பாராட்டுவோம். மந்திரி என்ற கர்வத்தில் அவர் பேசியிருப்பாரானால், 'கோட்டைக்கு வெளியே அண்ணாத்துரை மன்னர்' என்பதை மறந்தேதான் பேசியிருக்க வேண்டும்.

விவாதத்தின்போது, எது எது தி.மு. கழகத்தின் அதிக விளம்பரமான கொள்கைகளோ அந்தக் கேள்விகளுக்குத்தான், காங்கிரஸ் மந்திரியின் ஸ்தானத்தில் இருந்துகொண்டு எசமானர் கட்டளைப்படி கையை விரித்திருக்கிறாரே தவிர, அண்ணா அவர்களின் தெளிந்த அரசியல் அறிவை அறிமுகப்படுத்தும் பொதுப்படையான கேள்விகளுக்கு சுப்ரமணியம் கடைசிவரை பதில் சொல்லவே இல்லை.

"இங்கு நிதியமைச்சர் அவர்கள் நிதிக்கும் அமைச்சர்! நிதிக்கும் அமைச்சர் - கல்விக்கும் அமைச்சர். ஆனால் செலவினங்கள் உள்ள இலாகாக்களை நிதி அமைச்சர்கள் வைத்துக் கொள்ளாதிருப்பது தான் வெளிநாடுகளின் ஜனநாயகப் பண்பு.

செலவினங்கள் உள்ள இலாகாக்களை நமது அமைச்சர் வைத்துக்கொண்டிருப்பதினால் தன்னுடைய இலாகாக்களுக்கு வாரி வாரி வழங்கிவிடுவார் என்பதினால் அல்ல - மாறாக, எங்கே அப்படிச் சிலர் கூறுவார்களோ என்ற எண்ணத்தில் அமைச்சர் தன் கீழுள்ள இலாகாகளைப் பட்டினிபோட்டுக் கொன்றுவிடுவாரோ என் பதினால்தான் இந்த இலாகா பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப் பட வேண்டும் என்று எடுத்துக் கூற விரும்புகிறேன்."

—அண்ணாவின் வாதத்தில் காணப்படும் பொதுப்படையான குற்றச் சாட்டு இது. இதற்குச் சரியான பதிலைத் தேடித் தேடிப் பார்த்தும் சுப்ரமணியத்தின் பேச்சில் ஒரு வரிகூடத் தென்படவில்லை. வார்த்தைக்கு வார்த்தை ஏட்டிக்குப் போட்டியாகப் பதில் சொல்லியிருக்கும் நிதியமைச்சருக்கு, திராவிடர் தலைவரின் இந்தக் கேள்விக்கு மட்டும் பதில் சொல்ல வகையில்லாது போனது கேலிக்குரியதாகாது. ஏனெனில் இதற்கு எந்தக் கோணத்திலிருந்தும் பதில் சொல்லமுடியாது, குற்றத்தை ஒப்புக்கொண்டால் ஒழிய!

நிலச் சீர்திருத்தம் பற்றிப் பேசும்போதும் அண்ணா அவர்கள் சர்க்காரின் கோழைத்தனத்தை நேரடியாகக் கண்டித்தார்கள்.

"வினோபா அவர்களது பூதானம் பற்றிக் கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் சர்க்கார் நிலச் சீர்திருத்தம் செய்யப் போகிறோம் என்று பேசிக் கொண்டே காலம் தாழ்த்தி வருகிறார்கள்! இதனை மறைப்பதற்கு ஒரு திரையாகவே அவர்கள் வினோபாவை பயன்படுத்திக் கொள்கிறார்களோ என்று அஞ்சுகிறேன்."

-என்று எடுத்துரைத்தார்கள். இதற்கு சுப்ரமணியம் முறையாகப் பதில் சொல்லியிருக்க வேண்டும். பூதானக் கிழவர் போகுமிடமெங்கும் ஓடி ஆடிப் பணிபுரிந்தவர் இந்தச் சுப்ரமணியம்தான். அவருடைய பணியில் சர்க்காருக்கு அக்கறையிருக்குமானால் அதை ஏன சட்டப்பூர்வமாகக் கொண்டுவரக் கூடாது என்று அறிஞர் அண்ணா இடித்துரைத்தார். இதற்குப் பதில் கொடுத்தாரா எதிர்க்கட்சித் தலைவர்! இல்லையே! பதில் சொல்வதானால் 'முதலாளிகளுக்கு நாங்கள் பயப்படுகிறோம்' என்றுதான் சொல்ல முடியுமே தவிர, சபையில் ராஜா முத்தையா செட்டியாரையும், பிற ஆலை முதலாளிகளையும் வைத்துக்கொண்டு மிட்டாமிராசுகளைக் கண்டித்திட முடியவே முடியாது நிதியமைச்சரால்!

பதில் கூற முடியாமல் மழுப்பி விடப்பட்ட இந்த இரண்டு சிக்கல்களும் தமிழகத்தைப் பொறுத்தவரை இன்றியமையாதவைகளாகும். சுப்ரமணியம் பிரமாதமாகப் பேசிவிட்டார் என்று பூரித்து நிற்போர் அனைவரும் இதற்கு என்ன மனச் சாந்தி கொள்வார்களோ தெரியவில்லை. யார் என்ன நினைத்துக் கொண்டிருந்தாலும் அவர் போக வேண்டிய இடத்திற்குப் போய் விட்டார். சுப்ரமணியம் கொடைக்கானல் போய்விட்டார் அல்லவா! அதைத்தான் குறிப்பிடுகிறோம். வேறொன்றுமில்லை ★



பதக்கம் பெற்ற ரங்கா

அண்மையில் குடியரசுத் தலைவரின் பரிசு பெற்றுத் திரும்பி வந்துள்ள பட டைரக்டர்-தயாரிப்பாளர் பி. எஸ். ரங்கா அவர்களை கலை நுணுக்க நிபுணர்கள் வரவேற்பளித்துப் பாராட்டினார்கள்:

திரு. பி. எஸ் ரங்கா அவர்கள் 'தெனாலி ராமகிருஷ்ணா' என்ற தெலுங்குப் படத்தைத் திறம்பட எடுத்ததற்காக, வெள்ளிப் பதக்கமும் அகில இந்திய நற்சான்றிதழ் பத்திரமும் கொடுத்து, குடியரசுத் தலைவர் கௌரவித்தார்.

திரு ரங்கா 1936ம் வருட முதல் ஒளிப்பதிவாளராக இருந்து திரைப்படம் பல படங்களைத் தயார் செய்து நன்மதிப்புப் பெற்றிருக்கிறார். நூதனக் கருத்தை நல்ல முறையிலே வெளியிட்டு மக்களின் ஏகோபித்த அபிமானத்துக்கு இவர் ஆளாகியிருக்கிறார். விகடகவியான தெனாலிராமனை, நாடுகாத்த நல்லவனைச் செய்த தோடல்லாமல், பண்டைப் பண்பு கெடாமலும் சிருஷ்டித்த பெருமை திரு. ரங்காவைச் சேரும். தெனாலி ராமகிருஷ்ணனை நாடு காத்த நல்லவனாக ஆக்குவதற்கு பத்து வருடங்களுக்கு மேல் பாடுபட்டிருக்கிறார் திரு. ரங்கா. தமிழிலும், இதே கதையை தரம் குறையாதபடி 'தெனாலிராமன்' என்ற பெயரில் வெளியிட்டு, ரசிகர்களிடம் நன்மதிப்புப் பெற்றிருக்கிறார்.

திரு. ரங்கா அவர்கள் விடாமுயற்சியுடையவர். தனது விடா முயற்சியினாலும், உழைப்பினாலும் மேன்மையடைந்தவர். நேரத்தைத் தவறவிடாமல், எதையும் குறித்த காலத்தில் செய்து, திரைப் பட உலகிலே தனக்கென ஒரு தனித்தன்மை வகுத்துக்கொண்ட திரு. பி. எஸ். ரங்கா அவர்கள் எதிர்காலத்திலும் சிறந்த படங்களைத் தயாரித்து, பல பரிசுகளைப் பெறுவார் என்று எதிர்பார்க்கிறோம்.

படத்தில், ரங்கா அவர்களுக்குப் பக்கத்தில் நிற்பவர் அவரது அசோசியேட் டைரக்டர் திரு. பாலசந்திரன்.

மலைமுகட்டின் சிகரத்திலிருந்து வெள்ளிரசம் உருகி வழிவது போல் அவளுடைய கூந்தல் நெளிவு பெற்று மெள்ளத் தவழ்ந்து மென்காற்றில் மிதந்து கொண்டிருக்கிறது. செதுக்கிய சந்தனக் கட்டையில் சிவப்புக்கல் பதித்திருக்கிறதோ என்று ஐயுறும் வண்ணம் அவளுடைய நெற்றித் திலகம் பளிச்சென்று மின்னிக் கொண்டிருக்கிறது. அவள் சிரித்தால் முல்லைப்பூ நினைவுக்கு வருகிறது. செவ்விதழைச் சேர்த்தால் குடை ஆரஞ்சுச் சுளைகள் மனக்கண்ணில வர்ணச் சித்திரமாகப் பதிகின்றன. பட்டுத் தெறிக்கும் ஜோதி கொண்ட எட்டுக்கல் வைர மூக்குத்தி, கடைந்தெடுத்த அவளுடைய சித்திர மூக்கிற்கு சாரதியாக அமர்ந்திருக்கிறது. சித்துக் கழுத்தில் விலை பெற்ற முத்து வடம் தேரையை விழுங்கிய பாம்பைப் போல் பின்னிக்கொள்வதும், பின் பிரிந்து கொள்வதுமாக இருக்கிறது. வழவழப்பான தரையில் எலுமிச்சம் பழத்தை உருட்டிவிட்டதைப் போல ஓடுகிறாள். ஓட்டமா அது, ஒய்யாரமான அபிநயமா என்று கண்டுபிடிக்க முடியவில்லையே! அவள் ஓடும்பொழுதும், நடக்கும்பொழுதும் அவள் அணிந்திருக்கும் வெள்ளிக் கொலுசு காலம் தவறாமல் தாளம் அல்லவா போடுகிறது! தப்புயா அவள் பயிற்சி பெற்றிருக்கிறாள். அவள் நாட்டியக்காரி கூட இல்லையே! நாட்டியம் பயில வேண்டிய பருவத்தில் அவள் நாடோடியாக, நாதியற்றவளாக அல்லவா திக்குத் தெரியாமல் அலைமோதித் திரிந்திருக்கிறாள்! காதல் உணர்ச்சியைத் தவிர கள்ளங்கபடம் அறியாத கன்னிப் பெண்ணைப்போல் எப்பொழுதும் அமைதியிழந்தே காணப்படுகிறாளே; முன்பெல்லாம் அழகுக்கு அழகு சேர்த்துக்கொள்வாள்; ஏன் இப்போது ஏகாந்தியாகவே இருக்கிறாள்? ஒரு முறை பார்த்தவர்கள் மறுமுறை பார்க்கத் துடிக்கிறார்கள்; பார்க்கத் தவறியவர்கள் 'பாவச்சடலம் இது' என்று தங்களையே நிந்தித்துக்கொள்கிறார்கள்.

இத்தனை பெருமதிப்பு, அவளிடம் குவிந்து கிடக்கும் செல்வத்திற்காக ஏற்பட்டதா? அவளுடைய எழில் உருவம் சேகரித்ததா?

அவளைக் காட்டிலும் பணக்காரிகள் நாட்டிலே இருக்கிறார்களே, அவர்களுக்கெல்லாம் இந்தப் பெருமையா இருக்கிறது!

அவளைக் காட்டிலும் அழகிகள் தோகை மயில்களைப்போல், தொட்டால் ஒட்டிக்கொள்ளும் வெள்ளை வாத்துக்களைப்போல் எத்தனையோ இளமான்கள் இருக்கிறார்கள், அவர்களையெல்லாம் இருக்குமிடம் தெரியாமல் செய்திடக் காரணம் தான் என்ன?

அவள் பாடகி! கானக்குயில்! அவளுடைய இனிய குரல் பச்சைப்பாம்பின் ஓட்டத்தைப் போல் நெளிந்து ஓடுகிறது; அவள் சுரம்பாடுகையில் வீணையின் அமுதக்குரல் கேட்கிறது; நாதசுரத்தின் இழைப்புத் தோன்றுகிறது; புல்லின் இனிய நாதம் அவளுக்குப் பின்னே ஓடி வருவதே தெரியவில்லை. தனித்திருந்து அவள் முனகும்போது, ரவிவர்மாவின் கூந்தல் மோகினியின் சுருள் கூந்தலைப் போலிருக்கிறதே குரல், என்று கற்பனை செய்துகொள்கிறார்கள் இசை ஞானம் பெற்றவர்கள். குதித்தோடும் கன்றை நிறுத்தும்சக்தி, குத்தவரும் காளையைத் தடுக்கும் வலிமை, கொத்தவரும் பாம்பை ஆட்டுவிக்கும் ஆற்றல் இசைக்கு உண்டு என்றால் அந்த இசைவாணிக்குச் சாவில்லை தான், அச்சமில்லை தான் என்று கற்றவர்கள் சொல்கிறார்கள்.

அடாணா பாடினால், ஆணையையும் பெண்டிரையும் அடலேறுகளாக்கி அத்தனை பேருக்கும் தளபதியாகி விடுகிறாள். அவளுடைய தொனியிலே செங்குட்டுவனின் போர் முரசு ஒலிக்கிறது. முகாரி பாடினால் எதிரே இருப்பவர்களை, தலைக் குழந்தையை இழந்தவர்களைப் போல்தேம்பிட வைக்கிறாள்.

நீலாம்பரி எடுத்தாலோ. இசை கேட்கும் பெண்கள் தங்களையுமறியாமல் மடியிலிருக்கும் மழலைக்களைத் தட்டிக் கொடுக்கத் தொடங்கிவிடுகிறார்கள். அவள் கச்சேரியென்றால் இசைப் பைத்தியங்களுக்குக் கானமழை! கற்கண்டுச்சாறு! அமுதப்படைப்பு அத்தனையும் தித்திப்பு! பிறரைச் சிரிக்க வைக்கிறாள் தானும் சிரிக்கிறாள்; கொட்டகையை அழுக வைத்துத் தானும் அழுகிறாள். கச்சேரி முடிந்துபோகும் போது அவள் சென்ற திக்கில் மண்புகை மறையும்வரை இசை ரசிகர்கள் சிலையாக இருந்துவிடுகிறார்கள்.

அத்தகைய கானக்குயில் இப்போது ஏன் வாய் திறப்பதில்லை?

ஊமைபோல் இருக்கிறாள். இயந்திரத்தைப்போல் வாழ்க்கைக் கடன்களை முடிக்கிறாள். குளிர்ந்த நிலத்தில் அவள் குரலின் குரல் அதிகம் கேட்கும் மன்பர்கள்; அந்தக் குறை ஏனோ இந்தக் குயிலுக்கு ஏற்பட்டுவிட்டதா? நிலவோடு பேசினாள்; நீல மேகத் தாரகைகளை அழைத்தாள்; ஊரையே தூங்கவைத்த அவளுடைய இசை இரவுகளே இப்போது தூங்குகின்றன.



போது நலத்திற்கு இருந்த பூங்கா அழிந்துவிட்டதைப் போல் காதலர்கள் வருந்துகிறார்கள்; தமங்கைகள் ஏங்கித் தவிக்கின்றன; அவள் பாடவில்லை. ஆகையால் ஊர் பொலிவிழந்தது என கிராமத்து மக்கள் விசனப்படுகிறார்கள். 'குயிலே நீ பாட மாட்டாயா? உன் கீதமில்லாமல் ஆற்றோரத்து மயில்கள் ஆட மறுக்கின்றன. அந்த ஆட்டமில்லாமல் எனக்குக் கவிதை வரவில்லை' என இளங்கவிகள் புலம்புகின்றனர். ஏன் அவள் பாட மறுக்கிறாள்?

★

கொல்லிடத்துக்கரையில் ஒரு அழகிய சிற்றூர். அந்த ஊரை மாங்காடு என்று அழைக்கிறார்கள். நல்ல தமிழ் சொற்களை மகுடமாகக் கொண்டிருந்த சில ஊர்கள், சொல் வழக்கில் வேறு பெயர்களைக் கொள்ள நேர்ந்ததைப்போல், 'மான்காடு' என்றிருந்த பெயர் மாங்காடு ஆயிற்று. ஒரு காலத்தில் அந்தப் பகுதியில் மான்கள் அதிகமாக இருந்ததாம். வீடுவாசல்கள் ஏற்படுமுன் மிட்டா, மிராசு வீட்டு வாலிபர்களும் மிடுக்குள்ள துரைமார்களும் அந்தக் காட்டுக்குத்தான் வேட்டைக்குப் போவார்களாம் இப்போது அந்த ஊர் தாமரைத் தடாகமாக் மாறிவிட்டது. நூற்றுக்கு மேற்பட்ட தென்னங்கீற்று வீடுகளுக்கு மத்தியில் வண்ணம் கூட்டிய தெப்பத்தைப்போல் ஒரு சிங்கார மாடிவீடு இருக்கிறது. அந்தக் கட்டிடத்தில் இசையின் சாயல்படிந்திருக்கிறது. அழகுக்காக வைக்கப்பட்டிருக்கும் பொம்மைகள் கூட கைகளில் வீணையையும், தம்பூராவையும் வைத்திருக்கின்றன. வீட்டு முகப்பில் தொங்கிய ஒரு நீலத்திரையில், சங்கீதக் கலைஞன் ஒருவன் ஒரு யுவதிக்கு பாட்டுச் சொல்லிக் கொடுப்பதுபோல் சித்திரம் தீட்டப்பட்டிருக்கிறது. அதுதான் அந்தப் பாடகியின் இல்லம். அது அவளுக்காகவே கட்டப்பட்ட மாளிகை.

பத்தாண்டுகளுக்குமுன் அவள் அதே மாங்காட்டுக்கு ஒரு கச்சேரிக்கு வந்தாள். கோயிலிலே கும்பாபிஷேகம். அதற்காகத்தான் அவள் அந்தக் கிராமத்திற்கு அழைக்கப்பட்டிருந்தாள். அவள், அங்கு தங்கியிருந்த வீடு இசையிலே அளவு கடந்த பற்றுதல் கொண்ட ஒரு பணக்காரர் வீடு. அவருக்கு பாடத் தெரியாது. ஆனாலும் அவர், 'சங்கீதம் சரவணபவா' என்றே அழைக்கப்பட்டார். பாம்பாட்டியைப் பார்த்தாலும் பக்கத்தில் உட்காரவைத்து மகுடி ஊதச் சொல்லுவார். நாதசுரமென்றால் அவருக்கு உயிர். நாதசுரக் கலைஞர்களைப் பற்றி விமர்சனம் செய்யத் தொடங்கி விட்டால் அவருக்கு நாள் போவதே தெரியாது. "அவர் தோடியிலே வல்லவர்; இவருக்கு பல்லவிதான் வரும். நீடாமங்கலத்தார் தனியாவர்த்தனம் தொடங்கிவிட்டால் எதிரிலே நிற்கும் தவுல்காரன் ஓடியே போய்விடுவான்" என்று கதைத்துக்கொண்டே இருப்பார்.

இவ்வளவு சின்ன வயதில் சங்கீதத்திலே அவருக்கு இந்த அளவு ஞானம் வளர்ந்திருந்ததைப் பார்த்து ஆச்சரியப்படாதவர்களே இல்லை. அதைப்போல் தான் கச்சேரிக்கு வந்திருந்த பாடகியும் ஆச்சரியப்பட்டாள்; பெருமூச்சு விட்டாள். "அழகான வீடு; ராஜபோக வாழ்வு; கிராமத்திலே நல்ல கீர்த்தி" ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ளாமலிருக்கிறார்? — அண்டை வீட்டுக்காரருக்குக் கூட எழாத சந்தேகமும் அக்கறையும் அவளுக்கு ஏற்பட்டன.

இரவுநேரம். வானத்துத் தாரகைகள் அவளுக்குக் கச்சேரிக் கொட்டகையை நினைவுப்படுத்தின. விளக்குப் போட்டவுடன் பெண்கள் பகுதி நட்சத்திரங்களைப்போல் மின்னும். பணக்கார வீட்டுப் பெண்கள் அணிந்து வரும் நகைகள் நட்சத்திரமாக அவளுக்குப் பட்டன. அப்போது

— 6-ம் பக்கம் —

★ தென்னரசு ★

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 3 | 11—5—57 | இதழ் 34

முதலாளித்துவம் ஒழிக!

கடந்த ஒருவார காலமாக தமிழ் நாடு முழுவதும் கைத்தறி வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது. நன்றியுள்ள தமிழ் மக்களின் பேராதரவால் கைத்தறி விழா சீரும் சிறப்புமாக நடைபெறுவதாக செய்தித்தாள்களில் பார்த்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஆண்டுக்கு ஒருமுறை திருவிழாவை நடத்திவிட்டு ஆலயத்தை மூடிவிடுவது போல் இல்லாமல் தினம் தினம் தமிழ்க் குடும்பங்களில் கைத்தறி பற்றிப் பேசும் நிலைமை ஏற்பட்டிருப்பது தமிழ்நாடுதன்னைச் சரிப்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறது என்பதைக் காட்டுகிறது.

மக்கள் மத்தியில் எவ்வளவுதான் அனுதாபமிருந்தாலும், அக்கரையிருந்தாலும், கைத்தறியாளர்பால் நல்லெண்ணமிருந்தாலும் அரசியலாரின் பேருதவி இல்லாமல் கைத்தறியாளர்களின் வாழ்வு வளம்பெறும் யென்பதிலே நமக்கு நம்பிக்கையில்லை. ஆகவே, பொதுமக்கள் பல அரசியல் கட்சிகளாகப் பிரிந்திருப்பதால் அவரவர்களின் கட்சிகளின் சார்பில் கைத்தறியாளர்களை ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல், அரசியலாருக்கும் அவர்களுடைய நிலைமையை எடுத்துச் சொல்ல வேண்டும். அந்தப் பணியை கடந்த நான்கு ஆண்டுகாலமாக திராவிட முன்னேற்றக் கழகம் முன்னின்று திறம்பட ஆற்றி வருகிறது என்பதை, நாமாகச் சொல்லிக்கொள்ளவில்லை; நாட்டிலே உள்ள அத்தனைபேரும் நம்மைப் பாராட்டினர்.

முதலாளிகள் ஒழிக—என்று உரக்கக் கோஷமிட்டால் நாட்டில் சமத்துவம் நிலவிவிடும் என்று அரசியல் தொழில் நடத்தி வருபவர்கள் கூட கைத்தறியாளர் பிரச்னை கவனத்திற்கு வந்த போது கண்ணயர்ந்துவிட்டார்கள். சுத்தியல் பிடிப்பவர்கள்தான், கதிர்அரிவாள் ஏந்துபவர்கள்தான் தொழிலாளிகள் என்று அந்த அரசியல் ஸ்தாபனத்துக்காரர்கள் தவருக எண்ணிவிட்டார்கள்.

ஆயிரம் கைத்தறியாளர்களுடைய வாழ்வை உயர்த்தினால் ஒரு முதலாளி உருவாவது தடைப்படுகிறது என்பதை அந்தத் தொழிலாளர் கட்சி புரிந்துகொள்ளாதது வருந்தத்தக்கதாகும்.

ஒரு பெரிய முதலாளி ஆலை ஒன்றை விலைக்கு வாங்கிஆயிரக்கணக்கான கைத்தறியாளர்களுக்கு வேலை இல்லாது செய்தால் அந்த உழைப்பாளர்களுடைய கதி என்னுவது என்பதை ஏனே அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. அந்த நற்பணியை தென்னுட்டைப் பொருத்த வரையில் தி. மு. கழகம் தூய உள்ளத்தோடு செய்துமுடித்திருக்கிறது என்பதை நாடு மறக்காது; கைத்தறியாளரும் மறக்கமாட்டார்கள். உழைப்பாளிகளுக்கென்றே, பணக்காரர்களை, ஒழிப்பதற்கென்றே இருப்பதாகச் சொல்லிக்கொண்டு வரும் கட்சியினர் செய்யாததை தி. மு. கழகம் செய்து தன்னை ஒரு கடைந்தெடுத்த கம்யூனிஸ்ட் கட்சியென்று படித்தவர்கள் கருதும்படி நடந்துகொண்டது பெருமைக்குரியதாகும்.

தன்னுல் இயன்ற உதவியை மட்டும் செய்துவிட்டு கடமை தீர்ந்தது என்று கழகம் அயர்ந்துவிடவில்லை. நாட்டை ஆளும் சர்க்காருக்கும் கைத்தறியாளரின் கண்ணீரை சித்திரமாக்கிக் காட்டியிருக்கிறது. சட்டசபையில்தோழர் கோவிந்தசாமிமூலம் பலமுறை கேள்வி எழுப்பச் செய்திருக்கிறது பெரும் பெரும் காங்கிரஸ் தலைவர்களோடெல்லாம் இதுபற்றி அக்கரை எடுக்க சிபார்சு செய்திருக்கிறது ஆனுல் மற்றவர்கள், நாம் செய்ததில் எத்தனையில் ஒரு பங்கு செய்தார்களென்று நம்மால் கணக்கிட முடியவில்லை.

குடியாத்தம் தொகுதியிலிருந்துதேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அபேட்சகர் திரு வி. கே. கோதண்டராமன் அவர்கள் கூட புதிய சட்டசபையில் பலவகைப்பட்ட தொழிலாளர்களுடைய நலனுக்காகப் பேசியிருக்கிருர். ஆனுல் கைத்தறியாளர் பற்றி அவர் பேசவில்லை. அதன் உட்பொருள் நமக்குப் புரியவில்லை. ஏனென்ருல் எப்போதுமே அவர்கள் கைத்தறியாளர்களைப் புறக்கணித்தே வருகிருர்கள். ஒருவேளை கைத்தறியாளர்கள், கழகத்தின் அன்புக்குரியவர்களாகயிருக்கிருர்கள் என்பதற்காக கம்யூனிஸ்ட்டுகள் அவர்கள்பால் அக்கரை எடுத்துக்கொள்ளாமலிருக்கக்கூடும். அல்லது கைத்தறியாளர்கள் தொழிற்சங்கத்தில் சேர்ந்து கட்சிக்கு சந்தா கொடுக்காதது காரணமாக இருக்கும். எது காரணமாக இருந்தாலும் தனிப்பட்ட லாப நட்டத்தை, அல்லலுற்று ஆற்றவொண்ணு துயரடைந்துகொண்டிருக்கும் ஒரு தமிழ்ச் சமுதாயத்தின்மீது சுமத்துவது வரவேற்கக்கூடியதுதானு என்பதை வியர்வைத்துளியின் மகிமை உணர்ந்தோர் யோசிக்கவேண்டும்.

இந்திய அரசியலாரைப் பொருத்த மட்டில் நெசவாளர்களுக்கு உதவி செய்வதாகவும், அதற்கான பல திட்டங்கள் அடையிலிருப்பதாகவும் தெரிவிக்கிருர்கள்.

புதரிலிருக்கும் இரண்டு பறவைகளைக் காட்டிலும் கையிலிருக்கும் ஒரு பறவை சிறந்ததென்பார்கள். அதைப்போல் திட்டங்களைக் காட்டிக் காட்டி ஏமாற்ருமல் நடைமுறையில் கைத்தறியாளர்களுக்கான வசதிகளைச் சர்க்கார் செய்துகொடுக்க வேண்டும் காங்கிரஸ் சர்க்காரைப் பொருத்தமட்டில் உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் கொடுக்காமலிருப்பதே பேருதவியாகும். ஆனுலும் திட்டமிருப்பதாகச் சொல்லுகிருர்களே, அதையும் பொருத்திருந்து பார்ப்போம்.

நெசவாளர்களுக்கு உடனடித் தேவைகள் பல இருக்கின்றன. விருப்பமான நூல் தடங்களில்லாமல் கிடைக்கவேண்டும். அவர்கள் தயாரிப்பதை விற்பதற்கு எவராலும் பாதிக்கப்படாத ஒரு நிலையான மார்க்கட் வேண்டும். இவை முக்கியமான தேவைகளாகும். இதுவரை சர்க்கார் இவைகளுக்கான பரிகாரம் தேடியிருக்கிறதா என்பது சந்தேகம்தான். அதற்கு மாருக, டில்லி சர்க்கார் விசைத்தறித் திணிப்பை அமுலாக்கத் துடித்துக்கொண்டிருக்கிருர்கள். அந்தத் திட்டம் கைத்தறியாளர்களை உயிரோடு வதைக்கும் கொடிய திட்டம் என்பதை எல்லோரும் அறிவார்கள். இந்தியாவெங்கும் கைத்தறி வாரம் கொண்டாடப்படுகிறது. சர்வ கட்சித் தலைவர்களும் ஆங்காங்கே நடைபெறும் விழாக்களில் கலந்துகொண்டு சிறப்புரை வழங்குகிருர்கள். கைத்தறி பற்றிப் பேசி அறியாதவர்கள் கூட அனுதாபப்பட்டு பேசிக் காட்டுகிருர்கள். மத்தியப் பிரதேச முதன் மந்திரி டாக்டர் கட்சு இந்தூரில் கைத்தறியின் பெருமை பற்றிப் பேசியிருக்கிருர். சென்னைச் சட்டசபையில் லெட்சுமிகாந்தம் அம்மையார் கைத்தறிக்கென சில தினுசுகளை ஒதுக்க வேண்டுமென வற்புறுத்தியிருக்கிருர்கள். அகில இந்திய கைத்தறி போர்டு காரியதரிசி கே. ஏ. பத்மநாபன் கூட "காலத்திற்கு ஏற்ற முறையில் தேவப்படும தினுசுகளை அப்போதைக்கப்போது கைத்தறியாளர்களுக்கு விளக்குவோம்" என கட்டாக்கில் பேசும் போது குறிப்பிட்டிருக்கிருர். ஆனுல் இதே நேரத்தில்தான் டில்லியில் விசைத்தறித் திட்டம் தயாராகிறது. ஆட்டை அறுப்பதற்குமுன் அழகான பூமாலையைப் போட்டு அழகு பார்ப்பது போல் இந்திய சர்க்காரின் நிர்வாகம் இருக்கிறது.

தனித்தனிக் கொள்கைகளை வைத்துக்கொண்டு இயங்கிக்கொண்டிருக்கும் அரசியல் கட்சிகள் ஒத்துழைத்தால்தான் கைத்தறியாளர்கள் துயர் நிரந்தரமாகக் களையப்படும் என்பதை கைத்தறி வாரம் நடந்துகொண்டிருக்கும் இந்த நேரத்தில் நாம் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

முக்கிய அறிவிப்பு!

இதுவரை ஒப்புக்கொண்ட கூட்டங்கள் தவிர வேறு எந்தக் கூட்டத்திற்கும் ஆகஸ்டு இறுதிவரை வர இயலாத நிலையிலிருக்கிறேன் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

—கண்ணதாசன்.

பன்மொழிப் புலவர் மணிவிழா நிதி

★

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். ...	ரூ. 501	0	0
கண்ணதாசன் ...	,, 501	0	0
'தென்றல்' தமிழ்ப்பித்தன் ...	,, 51	0	0
ஜாம்நகர் அசோகன் ...	,, 5	0	0
பல்லடம் இரா. இரத்தினம் ...	,, 5	0	0
தேன்கனிக்கோட்டை விசயசேகரன் ...	,, 2	0	0
வேலூர் ஏ. ஆர். ஆறுமுகம் ...	,, 2	0	0
இதுவரை மொத்தம்	ரூ. 1067	0	0

நிதி அனுப்பவேண்டிய முகவரி:—

எம். குமாரசாமி,
பொருளாளர், பன்மொழிப்புலவர் மணிவிழா,
7, அருணுசல ஆசாரி தெரு, சேப்பாக்கம்,
சென்னை-5.

★ கவிஞனும் காதலும் ★

4

கோவலன் மாதவியிடமே தங்கி விட்டான். அல்லும் பகலும் அறுபது நாழிகையும் கோவலனும் மாதவியும் கூடிக் களிக்கிருர்கள். காதலர்க்கு ஏற்ற மாலைப்பொழுதில் அவர்கள் கண்கட்டி ஆடுகிருர்கள். இளமையின் சுகம் அனைத்தையும் கண்டு மகிழ்கிருர்கள். அவர்கள் மட்டுமா? நாடெங்கிலும் உள்ள இளங்காதலர் எல்லோரும் உல்லாசமாக ஆடி மகிழ்கிருர்கள். கணவர் மார்பில் ஒடுங்கி தங்கள் உடல், பொருள் ஆவி அனைத்தையும் கணவன் மார்புக்கே விலையாக்கி மகிழ்கிருர்கள். வண்ணப் பட்டாடைகள் அணிந்தும் எழில்மிகு நகைகள் சூடியும் அழகுக்கு அழகு செய்து இன்புறுகிருர்கள். கண்ணுக்கு மை தீட்டிக் கணவனைப் பார்க்கிருர்கள். தங்கள் அழகின் ஒவ்வொரு அணுவையும் கணவர் சுவைப்பதைக் கண்டுகளிக்கிருர்கள். கணவர் அருகிலிருக்கும் மாதர்கள் அந்த மாலையில் இப்படி அன்புக்கடலில் ஆடும் வேளையில் இளங்கோ நம்மைக் கண்ணகியிடம் அழைக்கிருன்

'கலவியும் புலவியும் காதலர்க்கு அளித்து முல்லையோடு மல்லிகை அவிழ்ந்த பல் பூஞ் சேக்கைப் பள்ளியுட் பொலிந்த மாதவிக் கொடியையும் மற்ற கொடிகளையும் கண்டீர்கள். ஆனல் அதே நேரத்தில் காதல் உணர்வும் கற்புநெறியும் கைவரப்பெற்ற கண்ணகிக் கொடி தனித்திருப்பதைப் பாருங்கள். குங்குமமும் எழுதாமல், அஞ்சனமும் தீட்டாமல், சிலம்பும் அணியாமல், மேகலையும் சூடாமல் கண்ணகி இருப்பதைப் பாருங்கள். மானங்காக்கும் ஆடைகள் தவிர மற்றய அணிகள் ஏதுமின்றி கையறு நெஞ்சத்தல் வாழும் கண்ணகியைப் பாருங்கள்.''

-என அழைக்கிருன். இளமை நலமும் அழகும் பொருந்திய அந்த வடிவம் சோகமயமாக உட்கார்ந்திருக்கும் அந்தக் காட்சியைக் காட்டுகிருன்.

மனையறம் படுத்த காதையில் கண்ணகியின் இயற்கை அழகை ஈடற்ற அழகாகக் காட்டி, "இதற்கு மேலும் வேருெரு நகை வேண்டுமோ? ஏன் சூடினர்கள் தோழிமார்கள்'' எனக் கோவலன்மூலம் கேட்கும் இளங்கோ, அதே இயற்கை அழகைத் தான் சோகச்சுவையோடு இங்கே காட்டுகிருன். இதே வடிவம் வழக்குரை காதையில் வீரச்சுவையோடு வருகிறது. ஆக, அணிமணிகள் சூடிக் கோவலனேடு களித்திருந்த காலையிலும் அந்த நகைகள் இல்லாமலே யே இயற்கை அழகைக் காதற் சுவையோடு காணுகிருன் இளங்கோ. பின்னிரு காதைகளிலும் அதே வடிவம்தான் வேறு வேறு உணர்ச்சிகளோடு வருகிறது. இப்போது கற்பனை செய்யுங்கள். செக்கச் சிவந்த மேனி; சிங்காரமான தோற்றம்; சிறுத்தஇடை; கறுத்த விழி; கூந்தல் விரிந்து கிடக்கிறது; சங்குக் கழுத்து நகைகளில்லாமலேயே பளபளவென மின்னுகிறது; சிலம்பில்லாத பாதங்கள் சித்திர வடிவத்தில் காட்சியளிக்கின்றன. கணவனைக் கட்டித்தழுவிய கைகள் மெலிந்து காணப்படுகின்றன. ஆடம்பரங்களால் தூக்கி நிறுத்தப்படத் தேவையில்லாத அழகு. அவள் நினைவு முழுதும் கணவன்மீதே இருக்கிறது. கண்கள் நிலைத்து நிற்கின்றன. சித்திரப்பாவையின் அத்தகவடங்கி அமர்ந்திருக்கிருள். காதலர்களை இன்புறுத்தும் மாலை தனித்திருந்த கண்ணகியைத் துன்புறுத்துகிறது. அந்தத் துன்பத்தில் உணர்ச்சி பாவம் எப்படி இருக்கும்? இதையும் சேர்த்துக்கொள்ளுங்கள் - கண்ணகி காட்சியாகிருள். கவிஞன் காண்பதை நாமும் காண்கிருேம்.

எந்தக் கவிஞனும் தன் கதாநாயகியை கருப்பாகவோ கோரமாகவோ சித்தரித்துக்கொள்வதில்லை. கவிஞனது இலட்சிய எல்லை, பேரழகிலே தான் முட்டிக்கொண்டு நிற்கிறது. அந்தப் பேரழகிற்கு இளங்கோவும் ஒடுகிருன்; கம்பனும் ஒடுகிருன்; பாரதியும் ஓடுகிருன்.

★

பெரும்பாலும் கவிஞர்கள் தாங்கள் காதலிக்கின்ற, அல்லது தங்களுக்குப் பிடித்தமான ஒரு பெண்ணை மனதில் வைத்துக் கொண்டுதான் தங்கள் கதாநாயகிகளை விவரிக்கிருர்கள். கம்பன் விரும்பிய ஒரு பெண்ணின் வடிவமே கம்பராமாயண சீதை. இளங்கோ விரும்பிய ஒரு பெண்ணின் வடிவமே சிலப்பதிகாரக் கண்ணகி. பாரதிதாசன் விரும்பிய ஒரு பெண் வடிவமே கொற்றவன் பெற்ற குலக்கொடி; பாரதி நேசித்த ஒரு பெண்ணின் செயல்களே 'கண்ணம்மா என் காதலி'. வள்ளுவன் கண்டு பேராச்சரியப்பட்ட ஒருத்தியே இன்பத்துப்பால் நாயகி.

கண்டுகளித்த காதலிகளை இலட்சியப் பெண்களாக்குவதே கவிஞர்கள் வழக்கம். அதனுல் தான் தமிழ்க் கவிஞர்கள் மறந்துகூட காவிய நாயகிகளின் கற்புநெறியை மாசுபடுத்துவதில்லை. எல்லை கடந்த குணங்களைக்கூட அவர்களுக்குச் சமர்ப்பிக்கிருர்கள். அவர்களுக்கு ஒரு இடையூறை விளைவித்துவிட்டு அதைக் களைய அரும்பாடு படுகிருர்கள். மிதிலாபுரிச் சானகியைக் காதல் நிலையில் காணும்போது தானே அனுபவிக்கிருன் கம்பன். அசோக வனத்தில் அவள் அல்லல் படும்போது அவனே கண்ணீர் வடிக்கிருன். இராமன் அவளை மீட்டுத் திரும்பும்போது தான் தன் காதலியை அடைந்து விட்டதாகக் கம்பனுக்கு ஒரு இறுமாப்பு. இப்படித் தான் இளங்கோவும், வள்ளுவனும், பாரதியும், பாரதிதாசனும்.

நான் சின்னவன். எழுத்திலே ஆரம்ப நிலை. கவிதைகள் எழுத வேண்டுமென்ற ஆசை. இப்போதுதான் இரண்டு வரி எழுதப் பழகுகிறேன். என் அனுபவங்களையும் கொஞ்சம் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சின்ன வயதில் நானெரு பெண்ணைக் கண்டேன். அடக்கமும், அழகும், அமைதியுமிக்க அந்தப் பெண்ணை நான் விரும்பினேன். அவள் என்னை விரும்பியதையும் அறிந்தேன். ஆனல் சந்திப்போ, சரசமோ, வர்ணனையோ, ஏன் வாய் வார்த்தை கூடக் கிடையாது.

ஆரம்பத்திலிருந்து நாடகம் பார்வைக் கட்டத்திலேயே இருந்தது. அந்தப் பார்வையே எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதற்குமேல் எதுவும் தேவையில்லை என்றே தோன்றிற்று. மிருக இச்சை கொண்டு அலைகிறதே ஆடவரினம், அதிலே என்ன இருக்கிறது, பார்வையும் பேச்சும் மட்டும் போதுமே என்று தோன்றிற்று. இளம் பருவத்து முதற் காதல் என்னைச் சிறிதுகூடத் தேகவெறிக்குத் தூண்டவில்லை. ஒவ்வொரு விநாடியும் அமைதி தவழும் அவள் முகத்தையும், சலனமற்ற பார்வையையும் ஓசையின்றி நடக்கின்ற பண்பையும் எண்ணி எண்ணிப் பார்ப்பேன். ஊருக்குக் கடைசியிலிருந்த ஊரணிக் கரையில் மாலை நேரங்களில் உட்கார்ந்து அவளைப்பற்றிப் பாடிக்கொண்டிருப்பேன். அந்த நினைவிலும் பாட்டிலும் தெம்பு இருந்தது. சூழ்நிலைகளை முழுக்க மறந்துவிட அந்த நினைவு துணை புரிந்தது. பதினறு வயதைக் கூடத் தாண்டாத அந்தப் பருவத்தில் அற்புதமான கற்பனைகளெல்லாம் மனதிலே உருவெடுக்க ஆரம்பித்தன.

அவளோடு நான் பேசியதில்லை. பேசினல் என்ன பேசுவோம் எப்படிப் பேசுவோம் என்பதைக் கற்பனை செய்து பாடிக்கொண்டிருப்பேன். அவளை நான் தொட்டதாகவும், அவள் துவண்டதாகவும் கவி புனைவேன். சத்திய நிலையை விட்டு இம்மியும் தாண்டாத ஒரு பத்தினிப் பெண் அவள், என்று பாடுவேன். சிறு கதைகளையும், பெருங் கதைகளையும் புத்தகங்களில் படிக்கும்போது அவற்றில் வரும் கதாநாயகிகளை அவளாகவும் கதாநாயகர்களை நானுகவும் கற்பித்துக் கொள்வேன்.

திருவிழாக்களில் அவள் என்னைப் பார்க்கும்போது அந்தப் பார்வைக்கு விதவிதமான பொருள்களை ஆக்கிக் கொள்வேன். இப்படி உணர்ச்சிகளின் ஒவ்வொரு அங்கமும் அவளுருவிலேயே பாய்ந்து பதிந்து பரவுவதைக் கண்டேன். இப்பொழுது தான் எனக்குப் புரிகிறது. என் கவிதைகளுக்கு அவள்தான் குரு. அவள் இல்லை என்ருல் கவி எழுதும் ஆசையே எனக்கு எழுந்திருக்காது. காதல், பார்வையிலேயே நின்று முறிந்து போனதால் என் இலட்சிய எல்லையில். இன்றைக்கும் அவளே நிற்கிருள். அந்தக் காதலியின் வடிவத்திலேதான் என் கதாநாயகிகள் படைக்கப்படுகிருர்கள். இன்றைக்கும் அவள் பெயரைக் கொண்டவர்கள் யாராவது இருந்தால் அவர்களை மரியாதையோடு பார்க்கத் தோன்றுகிறது. அந்தப் பெயருக்குக்கூட களங்கம் விளைவிக்கக் கூடாது என்று நான் எண்ணுகிறேன்.

இப்போது அவள் தோற்றத்தில் எவ்வளவோ மாறிவிட்டாள். ஐந்தாறு குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டாள். அழகையும் பொலிவையும் இழந்துவிட்டாள். என்ருலும் பழைய உருவம்தான் என் கண் முன்னுலே நிற்கிறதே தவிர இன்றைய வடிவம் வெறும் பிரம்மை என்றே தோன்றுகிறது. சின்ன வயதில் கண்ட அந்த உருவத்தை மனம் அவ்வளவு பதிய வைத்துக் கொண்டு விட்டது.

எங்கள் காதல், திருமணத்தில் முடிந்திருந்தால் இன்றைக்கும் அவள் என் இலட்சியக் கதாநாயகியாக இருப்பாளா என்பது சந்தேகம்தான். கிட்டாத பொருளுக்கு ஏங்குகிற ஏக்கம்தான் கற்பனைக்குப் பெருந்துணை புரிகிறது.

கணவனுக்குத் மனைவியிடம் கடமை தானிருக்கிறது. ஆனல் கைக்கு எட்டாத கன்னியிடம் தான் கடைசிவரை காதலிருக்கிறது. அந்தக் காதல்தான் கற்பனைக்கு வடிவமாகிறது.

மாங்கனி காவியத்தின் கதாநாயகியைத் தாசியாகத்தான் படைத்தேன். என்ருலும் பண்பைக் கெடுப்பதற்கு மனம் ஒப்பவில்லை. காரணம், மாங்கனியினிடத்தில் நான் காதலித்த அந்தப் பெண்ணிருந்தாள். பெரும்பாலும், கூறியது கூறல் எனும் குற்றத்திற்கு என்னை ஆட்படவைப்பதும் அவள்தான். எந்தக் கதைக்கும் அவளே முன்னல் வந்து நிற்பதால் கதாநாயகியை வர்ணிக்கும்போது நடம் அங்கேயே போய்ச்சேருகிறது.

(வரும்)

கண்ணதாசன்

கானக் குயில்...

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

ஒரு குரல்! அது சரகரத்த குரல்! வெற்றிலை பாக்குப் போட்டுக்கொண்ட மத்தளக்காரர் பேசுவது போலிருந்தது அவளுக்கு! கூர்ந்து கவனித்தாள். சங்கீதம் சரவணபவா தனிமையில் உட்கார்ந்துகொண்டு தானாகப் பேசிக்கொண்டிருந்தான்.

“முப்பது வயதாகிவிட்டதே! இன்னும் கல்யாணம் செய்துகொள்ளாதிருந்தால் ஊரார் நகைக்கமாட்டார்களா? எத்தனை நாளைக்குத்தான் பாடகிப் பெண்ணைத் தேடிக்கொண்டிருப்பது?”

பாடகி எழுந்துவந்து ஒளிந்து நின்ருள். அவள் பக்கத்தில் நிற்கிருள் என்பதை அவள் சூடியிருந்த முல்லைப்பூ அவனுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டது. திரும்பினுன். அவள் நின்ருள். சங்கீத தேவதையே அருகில் வந்து நிற்பதாக அவன் நினைத்துவிட்டான். அவள் கண்ணைத் துடைத்துக்கொண்டு படுக்கைக்குப் போனுள். இசையும் முல்லை மணமும் அவளோடு போய்விட்டன.

“அன்பைக்கூட அளவோடு காட்டவேண்டுமா? ஆசைக்கு நிறுவை இருக்கிறதா?”—என்று தத்துவங்களை உமிழ்ந்துகொண்டே அவன் கண்ணயர்ந்தான். சாலையரும்பியும் அவன் கண்விழிக்க விரும்பவில்லை.

“அவள் ஊருக்குப் போகப் போகிருள்; இசையுலகு என்னைக் கைவிடப்போகிறது; கள்ளிசையில் மயங்கி கடிகார ஓட்டத்தையே மறந்திருந்தேன். மெல்லியலாள் குரலில் மேகத்தைப்போல் மிதந்துவந்தேன். அவள் போகிருள். அவர் பிரிவைப் பார்ப்பதா?” என்று புலம்பிய சரவணபவாவை அவன் தாயார் எழுப்பினுள். துணுக்குற்று விழித்தான். பக்கத்தில் மாட்டப்பட்டிருந்த அவனுடைய புகைப்படத்திற்கு ஒரு ரோஜா மாலையைப் போட்டு வணங்கி நின்ருள் இசைவாணி.

“இசைவாணி!”

அவள் பதில் பேசவில்லை. சிரித்தாள். அவளுடைய மோகனப் புன்னகையில் முத்தமிழும் புதையுண்டு கிடந்தன.

சரவணன் எழுந்து தூணைப் பிடித்தான்; தொங்கும் திரையைத் தொட்டு இழுத்தான்; அன்னையை அண்ணுந்து பார்த்தான். அந்த கிழவியின் சிரிப்பில் ஆசையின் பூரணத்துவம் நிறைந்திருந்து. அதன் பிறகு தான் காண்பது கனவல்ல என்று சரவணன் எண்ணினுன்.

அதுமுதல் தினந்தோறும் அந்த மாளிகையில் இசைமழை பெய்தது. அதன் சாரல் கிராமம் முழுதும் பனித்துளியாகப் படிந்தது.

அவள் கச்சேரிக்குப் போவதில்லை. அவனை மகிழ்விப்பதிலேயே அவள் காலத்தைக் கழித்தினுள். பூபாளம் பாடி எழுப்புவதிலிருந்து, நீலாம்பரி பாடி தூங்கவைப்பது வரை அவள் தினசரிக் கடமையாகக் கொண்டிருந்தாள். நோயை உடையைப்போல், நேத்திரங்கெட்டவனைப்போல், சரவணபவா வீட்டைவிட்டே வெளியே வராமல் அடைக்கோழியாகவே இருந்தான்.

அவள் பாடுவாள். அவன் ரசிப்பான், ஆனந்தக்கண்ணீர் வடிப்பான். ஓடிப்போய் தழுவ நினைப்பான்; ஆனுல் தொடமாட்டான். தொட்டால், துன்புறுத்திஞல் இசை கெட்டுப்போகும், அழகு உருக்குலைந்துவிடும் என அவன் நினைத்தான். கண்ணுடிப் பெட்டிக்குள் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் தித்திப்புப் பதார்த்தத்தைப்போல் அவளை அவன் பாதுகாத்தான்.

ஆனுல் இப்போது?

அந்த இசை இல்லத்தில் இனிய குரல் கேட்பதில்லை. வீணையின் நாதத்தைக் காணேன். ஊரில் பலர், “சரவணபவா ஆறு மாதமாக ஊரில் இல்லை. அதனுல் தான் பாட்டு இசைப்பதில்லை” என்று சொல்கிருர்கள்.

நாட்டியக்காரிக்குச் சதங்கையைப்போல், ஓவியக் கலைஞனுக்குத் தூரிகையைப்போல் காவிய கர்த்தனுக்கு எழுதுகோலைப் போல், கானக்குயிலின் வாழ்க்கையிலே முக்கியத்துவம் பெற்ற சரவணபவா அவளை விட்டு எப்படிப் பிரிந்தான்? ஏன் பிரிந்தான்?

அவள் உலகை மகிழ்வித்தாள். இசைக்கலைக்கு மகாராணியாக விளங்கினுள். தாலாட்ட தாயில்லாக் குழந்தைக்கு தாயாக இருந்தாள். நோயுற்றவர்களுக்கு வேதனையை மறக்கடிக்கும் கலைவாணியாகத் திகழ்ந்தாள். ஆனுல் அவள் வாழ்க்கையில் இன்பம் பெற்ருளா? சுகம் அனுபவித்தாளா? இல்லறம் கண்டாளா? அவன் பூஜித்தான், அவள் பூஜைக்குரிய தெய்வமாகவே இருந்தாள். ‘என்னை மகிழ்விக்கத் தானே நீ எனக்கு மனைவியாக வந்தாய்? என் திருப்தி தானே உன் மனநிறைவு? நீ பாடு! நான் சுவைக்கிறேன். உன் குரலில் இருக்கும் இன்பத்தைவிட உன் உறவில் ஏதும் இல்லை” என்ருன்.

அவள் அன்பிற் குறிய நிண்டப்படாதவளாகவே இருந்தாள். கவலை கட்டிலைக் காட்டியது. பிணி பித்தமாக மாறியது. அவள் தொனிகெட்டு அழிந்தது. அவளுடைய பாட்டு அவனை மகிழ்விக்கவில்லை. காதுகளைப் பொத்திக் கொண்டான். “பாடாதே! நாராசமாக இருக்கிறதே” என்று கதறினுன். அவனுக்குப் பிடித்தமான இனிய குரலைத் தேடி அவன் எங்கோ போய்விட்டான்.

அவனது இசையில்லம் தூங்கி வழிகிறது. இசைவாணி இருட்டறை வாழ்க்கையை அனுபவிக்கிருள். குரல் கெட்டது, ஊருக்குத் தெரிந்தால் சிரிப்பார்களே என்பதற்காக அவள் பாடுவதில்லை,

மூலையில் இருக்கும் தம்பூராவில் நூலாடை படிந்திருக்கிறது. ★

ஆசிரியத் தோழருக்கு

—இராசன்—

பன்மொழிப் புலவர் மணிவிழா!

அன்புமிக்க ஆசிரியர் அவர்களுக்கு,

கரந்தைப் புலவர் கல்லூரி மாணவன் மணிவண்ணன் (வா. சக்கராம்) எழுதும் மடல்.

தங்களது தென்றல் மூலம் பன்மொழிப் புலவர் அப்பாத்துரையாருக்கு மணி விழா நடக்க இருப்பதை அறிந்தேன். மகிழ்ச்சி. செய்ய வேண்டிய ஒன்று. தாங்கள் அதில் பெரும் பங்கு கொண்டிருப்பது பற்றி அளவற்ற களிப்பு.

அவரின் புலமைக்கும், திறமைக்கும், பதினென்று மொழிகள் அறிந்த தன்மைக்கும், இன்னேரம் அவர் வேறு இயக்கத்திலோ, தனிப்பட்ட முறையிலோ இருந்திருப்பின், ஏராளமான பொருளைச்சம்பாதித்து இருப்பார். நம் இயக்கத்தில் அவர் பங்கு கொண்ட காரணத்துக்காக, அவருக்கு உரிய மதிப்பினைக்கூட தர மாற்ருர் மறுக்கின்றனர். மறுக்கின்றவர்கள் நிதி திரட்டுவதில் ஒத்துழைக்கமாட்டார்கள். எல்லாம் நாம்தான் அவருக்குச் செய்ய வேண்டும்.

நான் இருக்கின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக இது போன்ற கடிதங்கள்கூட சரிவர எழுதமுடியாது.

அப்படிப்பட்ட நிலையில் உள்ள நானே அப்பாத்துரையாரின் விழா பற்றி அறிந்ததும், அகமகிழ்ந்து கடிதம் எழுதுகிறேன் என்ருல், அந்த அறிஞர் எந்த அளவுக்கு என்னைக் கவர்ந்திருக்க வேண்டும், அவரது புலமைத் திறத்தால்.

நானும் எனது சிறிய உதவியாக ஏதேனும் செலுத்தலாம் என்று எண்ணி உள்ளேன். என்னுல் கொடுக்கமுடியும் என்று நம்பிக் கொண்டிருப்பது ஒரு ரூபாய்தான். இதுவரை நான் எந்த நிதியளிப்புக்கும் ஒரு காசு கொடுத்தது இல்லை. ம. பொ. சி. விழா, தேர்தல் நிதி, மாநாட்டு நிதி இத்திறப்பட்ட பல நிதிகளில் என் பங்கு என்று சொல்லத்தக்கது ஒரு பைசாவும் இல்லை. அப்படிப்பட்டவன் அப்பாத்துரையாருக்கு நான் ஒரு ரூபாய் தருகிறேன் என்ருல் அந்த நிதியளிப்பு அவருக்கு எவ்வளவு இன்றியமையாதது என்று நான் கருதுகிறேன் என்பதை தாங்கள் எண்ணிப் பார்க்கின் உணரலாம். என்னளவில் இது ஒரு சாதனைதான்!

விரைவில் என் பங்கினை நிதியளிப்புக் குழுவினரின் செயலாளருக்கு அனுப்பி வைப்பேன் என்று உறுதி கூறுகிறேன். நான் அவ்வப்போது பல நண்பர்களுக்கு அப்பாத்துரையாரைப் பற்றி கூறுவேன். கேட்பவர்கள் அவரை புதிதாக அறிந்துகொள்வது மட்டுமின்றி, அவரது திறமையையும் போற்றிப் புகழ்வார்கள். தென்றல் படிக்காத நண்பர்களும் உண்டு, அவர்களிடமும் இதன் அவசியம் பற்றி கூறி, அவர்களையும் நிதி அனுப்பும்படி நான் செய்கிறேன். நீங்களும் நல்ல முறையில் பாடுபட்டு நிதியை வசூலித்துத் தரவும். தாங்கள் கூறியிருப்பதுபோல 15000 ரூபாய் என்பது குறைவுதான். எனினும் அந்த அளவுக்கு நம் நாட்டவர்கள் அனுப்பிவிட்டாலே, போதும்.

இன்னென்று; தென்றல் வாயிலாக மணி விழா மலர் வெளியிடுவதாகத் தெரிவித்துள்ளீர்கள். இதையும் அவசியம் வெளியிடவேண்டும். அட்டைப்படம் ஆர்ட் பேப்பரில் அப்பாத்துரையாரின் உருவத்தைத் தாங்கியிருக்கவேண்டும். அவர் இதுவரை எழுதிய நூல்களை ஒன்றுகூட விடாது கஷ்டப்பட்டேனும் தொகுத்து வெளியிடல் வேண்டும். அதை வெளியிட்ட பதிப்பகங்களின் பெயரைக் குறிப்பிடுவது நல்லது. வாழ்க்கைக் குறிப்பினை சற்று விரிந்த முறையில் வெளியிடுங்கள். வாழ்க அப்பாத்துரையார்! வளர்க அவர் புகழ்!!

அன்புள்ள,
மணிவண்ணன்
பட்டுக்கோட்டை,

★

அரசியலாரே! அரசியலாரே!!

ஐயா, சென்னை அரசாங்க மின்சாரத் தொழிலாளர்களாகிய நாங்கள், எங்களது ஜீவாதாரமான கோரிக்கைகளுக்காக அமைதியான முறையில் போராடியதின் மூலமாக 1948-ம் ஆண்டு இலவச விடுதி, இலவச விளக்கு, இலவச உடை முதலியன கொடுப்பதென அரசாங்கம் உத்திரவிட்டது. அந்த உத்திரவை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென அன்றிலிருந்து இன்றுவரை (10 ஆண்டுகள்) சாத்வீகமான சகல வழிமுறைகளிலும் அரசாங்கத்தை அணுகினேம். அவர்கள் எங்களது நேர்மையான, தாழ்மையான வேண்டுகோளுக்கு செவி சாய்க்காது பொதுமக்களுக்கும், அரசாங்கத்துக்கும் இடையூறு ஏற்படுத்தக்கூடாது என்ற எங்கள் உறுதியை உடைத்து எங்கள், உரிமைக் கோரிக்கைகளை நிர்பந்தமூலமாக அடைய மார்க்கம் காட்டிவிட்டனர்.

அரசாங்கத்தின் ஆதரவிலே, அரசியலில் பங்கு கொள்ளாது தொழிற்சங்கம் வளரவேண்டுமென்று எங்களது உன்னதமான நோக்கத்தை ஊக்குவிக்கவேண்டிய அரசாங்கம் இன்று எங்கள் உரிமைகளைப் பறிப்பதன் மூலமாக சங்கத்தைச் சிதைக்க முற்பட்டுவிட்டது.

இந்நிலையில் எங்கள் உரிமையைக் காப்பாற்றவும், கொடுத்த உத்தரவை நிறைவேற்றி வைக்கவும், குறைந்த வருவாயில் சிரமமான வாழ்வு நடத்தும் எங்களுக்கு இப்போதாவது அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட உத்திரவு அமுலாக்கப்பட்டால் சிறிது உதவியாக இருக்கும் என்பதை பொதுமக்களுக்கும், சகோதர தொழிலாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்வதுடன், நாங்கள் நீதிக்காகவும், நேர்மைக்காகவும், உரிமைக்காகவும் நடத்தப்போகும் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்திற்கு உங்களது மகத்தான ஒத்துழைப்பையும் ஆதரவையும் கொடுப்பதுடன், குறிப்பிட்ட நாளுக்கு முன்னுல் எங்களது கோரிக்கையை அரசாங்கத்தார் ஏற்றுக்கொள்ளச் செய்யும்படி தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிருேம்.

இப்படிக்கு,
பொதுச் செயலாளர்,
மத்தியக் கமிட்டி.
பைகாரா, மேட்டூர், பாபநாசம்.

நியட்சேயின் தத்துவங்கள்

பிரஞ்சுப் புரட்சி ஆத்மீக நம்பிக்கைகளை உடைத்து மனிதனின் சிந்தனையை நிலைநாட்டியது; அந்த சிந்தனை, மக்களனைவரும் சமமென முறையிட்டது. பிறப்பால், சொத்தால், அந்தஸ்தால் உயர்ந்தவர்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தவர்களை சமத்துவத்திற்கு உருட்டிவிட்டது. ஆனால் அதற்குப் பின் தலையெடுத்த சில புதிய சித்தாந்தங்கள் மனிதன் அறிவு வளர்ச்சிக்குத் தரும் முக்கியத்துவத்தை நசுக்கி, வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்ற பலாத்காரத் தத்துவத்தை நாட்டில் தலைவிரித்து ஆடச் செய்தன. அதுதான் பாசிஸ்ட் இயக்கத்தின் ஜீவநாடியாக இருந்து வந்தது. அந்த நேரத்தில் இத்தாலியில், தேசியமா சர்வாதிகாரமா என்ற பிரச்சினை வந்தது. முசோலினி தேசியத்திற்காகப் போராடினன். ஆனால் அதில் வெற்றி பெற்ற முசோலினி தேசியத்தின் பெயரால் சர்வாதிகாரத்திற்கே வித்தூன்றினன்.

"இனி மேற்கொண்டு, இத்தாலி பொதுமக்களால் ஆளப்படமாட்டாது; உயர்ந்தவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும்; அரசாங்கம் கட்டளையிடும்போது அனைவரும் போர்க்களத்தில் குதிக்கவேண்டும்" என்று பல விதிகளை விதைத்தான் முசோலினி. முசோலினியே இப்படியென்றால் அவனுடைய ஆசான்?

நியட்சே — இவன்தான் முசோலினியின் ஆசிரியர். ஜார்ஜ் சோரலும், நியட்சேயும் தான் பலாத்காரத்தின் பலத்தை உலகத்தில் எடைபோட்டுப் பார்த்தவர்கள். தங்களின் தத்துவம் பெற்றெடுத்த இரண்டு 'கண்மணி'களை—இட்லரையும் முசோலினியையும் அவர்கள் தழுவிக்கொள்ளத் தவறவில்லை. நாஜிக் கொள்கைக்கும், பாசிஸ்ட் கொள்கைக்கும் முரண்பாடு இருந்தாலும் அந்த முரண்பாடு தீய்க்கும் சூரிய வெப்பத்திற்குமுள்ள முரண்பாட்டைப் போன்றதல்ல, துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டவனுக்கும் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டவனுக்குமுள்ள முரண்பாடுதான்.

சமத்துவத்தையும் சர்வோதயத்தையும், ஜனநாயகத்தையும் எதிர்த்திடும் அத்தகைய கொள்கைகளை ஓரளவு மக்களால் கவரச் செய்த அந்த நியட்சே யார்?

நியட்சேயை பிஸ்மார்க்கின் தம்பி என்று அழைக்கலாம். டார்வின் சித்தாந்தத்தில் சிலவற்றை நியட்சே தலையில் தூக்கி வைத்துக்கொண்டு ஆடினன்.

நியட்சே, வாழ்க்கை ஒரு போராட்டம் என்றான். தகுதிவாய்ந்தவர்களே அதில் வெற்றிபெறமுடியும் என்று வாதித்தான். வலிமைதான் தர்மமாம்!—இது நியட்சேயின் சர்வாதிகார இலக்கணம்—கொள்கைவிளக்கம்.

"வாழ்க்கைப் போராட்டத்தில் மனிதனுக்கு வேண்டியது நன்மையல்ல-வலிமை! தாழ்மையல்ல-செருக்கு! இரக்கமல்ல-திடசித்தம்! ஜனநாயகம், தேர்ச்சிக்கும் மீட்சிக்கும் எதிரானவை" என்று நியட்சே திடமாக நம்பினன். விதியையும் ஏற்றத்தாழ்வுகளையும் நீதியால் ஒருபோதும் மாற்றமுடியாது, அதற்கு மூலிகை வலிமைதான் என்றான் நியட்சே.

புகழ்பெற்ற ஜர்மானிய ராஜதந்திரியான பிஸ்மார்க்கின் கொள்கைகளே நியட்சேயைப் பெரிதும் கவர்ந்துவிட்டன.

"விசுவாசத்திற்குரிய சிக்கல்கள் வோட்டினாலும் பேச்சுக்களினாலும் தீர்க்கப்படுவனவல்ல; வாளேந்தி களத்தைச் சிவப்பாக்கிய பிறகுதான் அது தீர்க்கப்படும்,"—பிஸ்மார்க்கின் இந்த உயிர்க்கொள்கைகளை நியட்சே பூஜித்து வந்தான். பிஸ்மார்க்கின் அந்தக் கொள்கைகள்தான் ஜர்மானிய எழுச்சிக்கு அஸ்திவாரமிட்டது என்று நாடெங்கிலும் முரசறைந்து தனக்கு ஆள் சேர்த்தது நியட்சே ஒருவன்தான் என்பதை சரித்திரம் ஒப்புக்கொள்கிறது.

1844ல் ஜர்மனியில் ரோக் என்னும் ஊரில் பூசாரி ஒருவருக்குப் பிறந்தவன் நியட்சே. தனது பதினெட்டாவது வயதில் சமய நம்பிக்கைகளைத் தகர்த்தெறிய முனைந்தான். கிறிஸ்துவ சமயத்தை எண்ணியபோதெல்லாம் தாக்கிப் பேசினன். நிறையப் படித்துத் தத்துவங்களுக்குப் பலன் தேடிக்கொண்டான். பல நூல்களை எழுதினன். ஆனால் உலகத்தின் மிகப் பலரது ஆதரவு இல்லாமல்

இட்லரைக் கவர்ந்த கொள்கைகள்

அவனது கொள்கை நசித்துப்போகுமென்று அவன் நினைக்கவே இல்லை.

நியட்சே எழுதிய 'ஜராதுஸ்திரர்' என்னும் பிரசித்த நூலில்தான் அவன் தன் கருத்துக்களை ஏகதேசமாக பரப்பியிருக்கிறன்.

"ஜராதுஸ்திரருக்கு முப்பது வயது. குன்றின்மீது தியானம் செய்துவந்த அவர், மக்களுக்கு உபதேசஞ் செய்யக் கருதிக் கீழே வந்தார். ஆனால், கேட்கவந்தவர்கள் உபதேசத்திற்குச் செவிசாய்க்காமல், அண்மையில் கழைக்கூத்தன் ஒருவன் செய்த வேடிக்கைகளைப் பார்க்கச் சென்றனர். கழைக்கூத்தன் கயிற்றின் மீதேறி நடந்தபோது விழுந்து உயிர்துறக்கிறன்: ஜராதுஸ்திரர் உடனே சென்று அவனைத் தம் தோளின்மீது போட்டுக்கொண்டு போகிறர் "ஆபத்தான தொழிலை நீ மேற்கொண்டாய். ஆகவே, என் கைகளாலேயே உன்னைப் புதைக்கிறேன்" என்றார். பின்னர் மக்களைப் பார்த்து,"அபாயகரமாக வாழுங்கள். **வெசூவியஸ்** எரிமலையின் பக்கமாக உங்கள் நகரங்களைக் கட்டுங்கள். எவரும் செல்லாத கடல்களில் கப்பலோட்டிச் செல்லுங்கள், போராட்ட நிலையில் வாழுங்கள். குருட்டு நம்பிக்கையை இழந்துவிடுங்கள்" என்று போதித்தார்.

★

"ஜராதுஸ்திரர் ஒரு சமயம் கீழே இறங்கி வந்தபோது, முனிவரொருவர் அவரைச் சந்தித்துக் கடவுளைப் பற்றிப் பேசுகிறர். ஜராதுஸ்திரர் மீண்டும் தனிமையையடைந்தபோது, "இங்ஙனம் இருக்குமா? இத்துறவிக்குக் கடவுள் மாண்டது தெரியாது போலும்" என்றார்.

"அவர், ஒரு சமயம் சொன்னதாவது "சகோதரர்களே, மண்ணுக்கு நன்றி செலுத்துங்கள். மண்ணுலகுக்கு அப்பால் நம்பிக்கை தருவோரிடம் நம்பிக்கை வைக்காதீர்கள்."

★

"அழிப்பதன் மூலமாக வாழத் தெரிந்துகொண்டவர் எவரோ, அவரையே நான் நேசிக்கிறேன். அவரே முன்னேறுகிறவர்."

★

நியெட்சே தம் சித்தாந்தத்தை இதுபோல் பல நூல்களின் வாயிலாக வெளியிட்டுள்ளார். அதன் பிரதான முடிவுகள்:

"அழகு என்பது பூரண சக்தியின் வடிவம். பூரண சக்தியே வாழ்க்கையின் உட்கருத்து. வலிமையின் உரிமையொன்றே புனிதமான உரிமையாகும்.

★

"அடிமை யொழுக்கம், ஆண்டானின் ஒழுக்கம் என இருவித ஒழுக்கங்களுண்டு. சகோதரபாசம், அன்பு, இரக்கம், நீதி, தருமம், புண்ணியம், பாவம், உலக வாழ்வுக்கப்பாலுள்ள விண்ணுலக வாழ்வு ஆகியவைகளில் நம்பிக்கை கொள்ளச் செய்து ஆறுதல் அளிப்பதே அடிமையொழுக்கம். இதற்கு நேர்மாருக ஈவிரக்கம், நீதி, தர்மம் என்னும் இக்குணங்களை அறவே ஒழித்து வலிமை, தீரம், திடசித்தம், தியாகம் என்னும் புதிய மதிப்புக்களில் பொருந்தி, அகந்தையும் இச்சா சக்தியையும் பெருக்கி, உலக ஆதிபத்யத்தை அடைவதே ஆண்டானின் ஒழுக்கம். இவ்வொழுக்கத்தைச் சிறப்புடன் பயில்வோனே மனித வல்லமையுடையவன்.

★

மனிதன் இயற்கையின் சக்தியில் இறுதியாக வந்தவன் ஆயினும், அவன் இயற்கையில் ஓர் இடைநிலை; கடைசியான குறிக்கோள் அல்லன். ஏனெனில், இச்சக்தி மனிதனோடு முடிவடையவில்லை. மனிதன் வல்லமையுடையவனாக வேண்டும். வல்லமையைத்தான் உலகம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அவன் மானிடருள் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவன்; குறிப்பிட்ட சாதி, இனம், நாடு இவற்றினின்று வருபவனல்லன். அவனே வையத் தலைமை வகித்து, வாழ்க்கையைத் திருத்தியமைத்து அதற்கொரு புதிய அருத்தத்தையும் மதிப்பையும் தர முடியும்.

"சர்வ வல்லமையுடையவனாவதற்கு முக்கியமாக உடல் நலனும், வலிமையும், அறிவாற்றலும் வேண்டும். மனிதன் அபரிமிதமான சக்தியைப் பேரார்வத்துடன் விரும்ப வேண்டும். கேவலம், உயிர்வாழ்க்கையை மட்டும் விரும்பாது, முழு வலிமையுடன் கூடிய பெருவாழ்வையே விரும்பவேண்டும். அவன் தன் சுயவளர்ச்சியில் எதிர்ப்படும் இடையூறுகளையெல்லாம் திடசித்தத்துடன் தகர்த்தெறிய வேண்டும். பிறர்க்கு நேரிடும் துன்பம், அவன் புதிய ஆக்கவேலையைச் செய்யப் புகுமுன் மானிடர் மதிக்கும் நன்மை, தீமை, இரக்கம், சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம் இவற்றையெல்லாம் உடைத்தெறியவேண்டும். பலவீனம், வறுமை, வருத்தம், வாழ்க்கையில் வெறுப்பு இவற்றைக் குரூரமென இப்புவியினின்று ஒழிக்கவேண்டும்."

★

நியட்சேயின் இப்படிப்பட்ட சித்தாந்தங்கள் மனித உணர்ச்சியின் மென்மைத் தன்மையை மிருகத்தனத்திற்கு இழுத்துச் சென்றன. பேராசைக்கு வித்தூன்றின. ரத்தத் தடாகத்திற்கும் ரௌடித்தனத்திற்கும் மதிப்பளித்த நியட்சேயின் தத்துவங்கள்தான் ஒரு முசோலினியையும் இட்லரையும் படைத்தன என்றாலும் மானிட வர்க்கத்தை ஏற்றிச்சென்ற கால ஓடம், இட்லர்களையும், முசோலினிகளையும் எங்கோ ஒரு நீர்ச்சுழலில் தள்ளிவிட்டு நகர்ந்துவிட்டது. அத்தகைய ஓடத்தைச் செலுத்திப் போகும் ஜனநாயக வாதிகளை நாம் வாழ்த்துவோம்.

மாவட்டக் கழகக் கூட்டங்கள்

திருச்சி

அன்புடையீர்!

வணக்கம். நாளது 12-5-57 ஞாயிறு மாலை 3 மணிக்கு திருச்சி திராவிடப் பண்ணையில் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அனைவரும் தவருது வரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆய்வுக்கு வருபவை:

(1) பொதுத் தேர்தல் பற்றி விவாதித்தல்
(2) உள் ஆட்சி மன்ற தேர்தல் பற்றி ஆலோசித்தல்
(3) மாவட்ட மாநாடு பற்றி முடிவெடுத்தல்
(4) புதிய கிளைகளை அங்கீகரித்தல்
(5) செயலாளரால் கொணரப்படும் இதர தீர்மானங்கள்.

அன்பன்,
அ. பெ. தர்மலிங்கம்,
செயலாளர்.

★

வட ஆற்காடு

நாளது 26-5-57 ஞாயிறு மாலை 3 மணிக்கு வேலூர் டவுன் ஹாலில் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அனைவரும் தவருது வரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன், என மாவட்டச் செயலாளர் **முல்லைசத்தி** அறிவிக்கிருர்.



சிரிப்புதான் வருகுதையா!

[தியாகராயநகரில் தனது மாளிகையில் காமராசர் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கிறார். வேலையாள் வேலாயுதம் நடுங்கிக் கொண்டே அவரை எழுப்புகிறான். காமராசருக்குக் கோபம் வருகிறது.]

காம: என்னப்பா இது! ஒரே தொல்லையா இருக்குது.

வேலா: சி. எஸ். வந்திருக்காருங்க!

காம: என்னவாம்! அந்த ஆளு இங்கேயும் வந்துட்டாரா?

[அதற்குள் சுப்ரமணியம் காமராசர் அறைக்குள் வந்து விடுகிறார்.]

காம: என்ன சி. எஸ். அதிகாலையிலே வந்திட்டீங்க!

சுப்: நேத்திக்கி என்னுடைய பேச்சு எப்படீங்க?

காம: நான் என்னத்தைச் சொல்றது சி. எஸ்!

சுப்: அவ்வளவு பிரமாதமாகவா இருந்துதுங்க?

காம: சரிதான் போங்க! நீங்க அப்படிப் பேசியிருக்கவே கூடாதுங்களே?

சுப்: என்ன அப்படிச் சொல்றீங்க?

காம: ஆமா! அந்த ஆளு என்னடான்னா நமக்கெல்லாம் ஜனநாயகம் சொல்லிக் கொடுக்கும் வாத்தியாரு மாதிரியல்ல பேசுறாரு. அவரைப் போயி அப்படி இப்படியின்னு பேசுறீங்களே!

சுப்: இல்லிங்களே, நாம பேசாமெ இருந்துட்டா ஜனங்க நம்மை பயந்தாங்கொள்ளியினுல்ல நெனைச்சுப்புடுவாங்க.

காம: இல்லை சி. எஸ். யாராவது ஒரு புத்திசாலி உங்க பேச்சைப் படிச்சா, சர்க்காருடைய பலவீனத்துனாலே பேசிய பேச்சு இதுன்னுதான் சொல்லுவான். உங்களுக்கென்ன தெரியும்! சட்ட சபைக்கு வர்றதே இப்போது எனக்கு பரீட்சை எழுதுகிறது மாதிரியல்ல இருக்குது! காலரியிலே ஆளு இல்லாத காலங்களிலேயே நாம பேசுவது கிடையாது. இப்ப என்னடான்னா காலரி நிரம்பி வழியிது. அதுவும் எமன் மாதிரி அந்த அண்ணாத்துரை எனக்கு எதிரிலே உட்காந்துக்கிட்டு இருக்காரு. இனிமேலாவது ஜாக்கிரதையாப் பேசுங்க. ஏன்னா நாம் ஜனங்களை விட்டு வெகு தூரத்திலே இருக்கோம். அந்த ஆசாமி ஜனங்களுக்கு மத்தியிலே இருக்காரு. சட்ட சபையிலே நடக்கிறதையெல்லாம் அவரு ஜனங்களிடம் சொல்லுவாரு. அப்புறம் சந்தி சிரிக்கப் போகுது.

சுப்: அப்படியா! நீங்க சந்தோஷப்படுவீங்கன்னு தான் அப்படிப் பேசினேன்.

காம: ஏமாந்து போய்ட்டீர்களே!... இன்னொன்னு சொல்றேன். நீங்க அண்ணாத்துரையைச் சாமான்யமின்னு நெனைச்சுப்புடாதீங்க. ராஜாஜி கல்வித் திட்டத்தின்போது நீங்க வீம்பு பேசினீங்களே, அந்த ஆளுகிட்டே நடந்துதா உங்க கஜகர்ணம்! முந்திப் பிந்தி நடந்ததையெல்லாம் பாக்காதீங்க. அவுங்களும் சட்டசபைக்கு வந்துட்டாங்க! இனி அவுங்களைக் கலக்காமல் நாமும் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. ஆமா!

சுப்: அப்ப சரி, நான் கொடைக்கானல் புறப்பட்டுக்கிட்டு இருக்கேன்.

காம: அதுதானே கேட்டேன்; இன்னம் போகாமலிருக்காரே சுப்ரமணியம்னு நேத்திக்கே நான் நெனைச்சேன். போய் வாங்க. நீங்க அவசியம் கொடைக்கானல் போகணும். கூட...யாரு வர்றுப்பிலே?

சுப்: (கொஞ்சம் திணறி)... கூடவா...நான்மட்டும் தான் போறேன்.

[அப்போது 'பூம் பூம்' என்று மோட்டார் ஹாரன் கேட்கிறது. புதிய மோட்டார் ஒன்றிலிருந்து பக்தவத்சலம் இறங்கி வருகிறார்.]

காம: என்ன முதலியார், ஆஸ்பத்திரியிலிருந்து எப்ப வந்தீங்க?

பக்த: நேரா இங்கேதான் வர்றேன்.......... சி. எஸ். நேத்திக்கு உங்க சட்ட சபைப் பேச்சுப் பிரமாதம் போங்க. தி. மு. க. ஆசாமிங்க துடிச்சிருப்பாங்களே!

காம: அவுங்க ஏன் துடிக்கணும்! நீங்கதான் தடுக்கி விழுகுறீங்க. சி. எஸ்.க்கு ஜுரம் வந்துவிடுகிறது.

பக்த: இல்லிங்களே, அதுங்க விஷப்பூச்சிகளாச்சே!

காம: அப்படி ஒன்னும் தெரியல்லையே! நீங்க போயி அந்த ஆளை — அறிவுச்சூன்யம்னு சொன்னா அவங்க சும்மா இருப்பாங்களா? என்னமோ கொஞ்சம் நிதானமாகவே இனிப் பேசுங்க. அதோட நீங்க கொஞ்சம் தரையைப் பாத்து நடங்க. இன்னொரு தரம் விழுந்துடாதீங்க! ஏன்னா நீங்க பலமுறை விழுந்து விழுந்து எழுந்திருக்கிறீங்க.

[மூவரும் சிரிக்கிறார்கள். பின் பிரிகிறார்கள்.]

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர்: கண்ணதாசன், ...